**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,</u>**

**<u>FAST TRACK COURT, ARANI.</u>**
**<u>S.C.No.107/2018</u>**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.7** |
| **Name** | **:** | **திரு. செந்தில்குமார்** |
| **Father's Name** | **:** | **திரு. குமரவேல்** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**3வது எதிரிகள் ஆஜர். 4வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.01.2024.**

**<u>முதல் விசாரணை</u> -**

**நான் தற்போது காஞ்சிபுரத்தில் வசித்து வருகின்றேன். எலக்ட்ரீசியன் பணி செய்து வருகின்றேன். எதிரி ரவிச்சந்திரனை எனக்கு தெரியும். மற்றவர்களை எனக்கு தெரியாது. இந்த வழக்குச் சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த போது 03.05.2013 அன்று நான் ஆற்காடு மருத்துவமனைக்கு சென்றுக் கொண்டிருந்தேன். அப்போது**

விடியற்காலை 4, 5 மணியளவில் ஆஜர் எதிரி ரவிச்சந்திரன் மேஸ்திரி பணியை செய்து வருகிறார். அவரை போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் நான் போய் பார்த்தேன். என்னிடம் 3 இடங்களில் கையொப்பம் பெற்றார்கள்.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள கையொப்பங்கள் முறையே என்னுடையது தான். கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ-10 முதல் அ.சா.ஆ-12 வரை குறியீடுச் செய்யப்படுகிறது. சாட்சி தற்போது நிறைய வருடங்கள் ஞாபகம் இல்லை என்று சாட்சயிம் அளித்து தற்போது 4 கையொப்பங்கள் போட்டதாக சாட்சியம் அளிக்கிறார். 4வது ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ-13-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. அதில் என்ன எழுதியுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

கையொப்பம் போட்ட தாளை கொண்டு மேற்கொண்டு போலீசார் என்ன செய்தார்கள் என்றால அதை பற்றி எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு பகுதிக்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை பகுதி குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

அரசு தரப்பு பகுதி குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்த போது நாங்கள் சென்ற போது போலீசார் எதிரிகளை விசாரித்தது சம்மந்தமாகவும் அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்களுக்கு சாட்சி கையொப்பங்கள் போட்டு விட்டு தற்போது 1, 2 எதிரிகள் இறந்துவிட்டதாலும் 3வது எதிரி எனக்கு தெரிந்தவர் என்பதாலும் அவரை காப்பாற்றி வேண்டி அரசு தரப்பு தரப்பிற்கு எதிராக பொய்யாக

**சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்த போது வாக்குமூலத்தில் உள்ளவாறு வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை</u> - இல்லை.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.